1973 நவம்பர் 20]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதற்கான ஓராண்டு கால பயிற்சி தர, 8 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிருர்கள். தமிழ், வரலாறு, வடமொழி, இந்தியப் பண்பாடு, தொல்பொருள் ஆகியவற்றில் எம்.ஏ., பட்டம் பெற்ற எட்டு நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு உதவித் தொகையாக 125 ரூபாய் ஸ்டைபண்ட் வழங்கப்படுகிறது.

Additions to Madras Museum

* 204 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) the steps taken to procure new additions to the Government Museum at Egmore, Madras during the calendar years 1970, 1971 and 1972; and

(*b*) the cost of the new additions?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 1970 முதல் 1972 வரை கலைப்பொருள்கள் புதைபொருள்களிலிருந்தும், அன்பளிப்பாக பெறப்பட்ட வகையிலும், இதர மாநிலங்களிலிருந்தும், பிற நாடுகளிலிருந்தும் அனுப்பப்பெற்ற பொருள்களைக் கொண்டும் மேலும் ஆங்காங்கு அருங்காட்சியக அலுவலர்கள், பல பொருள்கள் சேகரித்தும் நேரடியாக வாங்கப்பட்டும், அரும்பொருள்காட்சி சாலையில் சேர்க்கப்பட்டன.

(ஆ) புதிய சேர்க்கைக்கான மொத்தச் செலவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

1970–71	ரூ.	பை.
1. புதைபொருள் நாணயங்கள்	1,198	60
2. மற்ற புதை பொருட்கள்	10,212	18
3. விலைக்கு வாங்கப்பட்டவை	317	00
1971–72		
1. புதை பொருள் நாணயங்கள்	1,948	30
2. மற்ற புதை பொருள்கள்	1,931	34
3. விலைக்கு வாங்கப்பட்டவை	4,229	00

THIRU N. DENNIS : May I know the proposals for new additions in 1973?

[1973 நவம்பர் 20

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதற்கான புதுச் சேர்க்கைகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால் தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் கொடுக்கலாம்.

மருந்து வாழ் மலையில் கிடைக்கும் மூலிகைகள்

*** 205 வினா—திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் பகுதியில் மருந்துவாழ் மலையில் கிடைக்கும் மூலிகைகள்குறித்து ஆய்வு ஏதேனும் மேற்கொள்ளப்பட்டு உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பாளையங்கோட்டை இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் அமைந்துள்ள மூலிகைச் செடிகள் ஆய்வுப் பிரிவினால் (Survey of Medicinal Plants Unit) மருந்துவாழ் மலையின்கண்ணுள்ள மூலிகைச் செடிகளைப்பற்றி முன் ஆய்வு (Preliminary Survey) ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அம்மலையி லுள்ள மூலிகைச் செல்வத்தின் நிலை ஊக்கமூட்டுவதாகவும், குறிப் பிடத்தக்கதாகவும் இல்லையென அவ்வாய்விலிருந்து அறியப் பட்டது.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, அந்த மலையிலே யிருக்கும் மூலிகைகள் தொழுநோயைக்கூடச் சரிப்படுத்துவதாகச் சொல்லப்படுகிறது. எனவே, மீண்டும் அதைப்பற்றித் தீவிரமாக அரசு கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அது என்ன மூலிகை என்று பெயரையும் சொல்ல வேண்டும். ஏனென் றால் தொழுநோயைக் குணப்படுத்தும் மூலிகை என்று இரண்டு, மூன்று மூலிகைகளைப் பல சித்த மருத்துவர்கள் குறிப்பிடுவது அறிந்திருக்கக்கூடியதாகும். அங்கேயிருந்து கிடைக்கும் மூலிகைகள் மற்ற இடங்களிலும் கிடைக்கும் சாதாரண மூலிகைகளே என்றும் தெரிவித்திருக்கிறார்கள். கிடைத்த மூலிகைகளின் பெயரை வேண்டுமானால் கூறுகிறேன். ஆங்கிலத்திலே தரப்பட்டுள்ள அந்த விஞ்ஞானப் பெயர்களைப் படித்தால்கூட நமக்கு விளங்கப் போவதில்லை. தமிழில் சிவனார்வேம்பு, இருப்பு மூறி, செப்பு நெரிஞ்சில், சிறுபுள்ளடி, வெண்கொடி வேலி, கருட நகம், நஞ்சறுப்பான் என்ற இந்த மூலிகைகள் மட்டும்